**CMP.No.984/2025**
**Cr.No. 173/2025**
தக்கலை காவல் நிலையம்,

08.06.2026

**உத்தரவு**

தக்கலை காவல் துறையினர் தரப்பில் குற்ற எண். 173/2025 என்ற வழக்கில் அனீஷ் மற்றும் கண்டால் தெரியும் 4 நபர்கள் மீது பா.நி.ச பிரிவுகள் 191(2), 296(பி), 115(2), 351(2) -ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, புலன் விசாரணையை முடித்துக் கொண்டு கடந்த 01.06.2025-ம் தேதி கண்டால் தெரியும் 4 நபர்களை குறைவு செய்து, சமூகம் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மேற்படி இறுதி அறிக்கையை பரிசீலனை செய்து, மேற்படி கண்டால் தெரியும் 4 நபர்களை குறைவு செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதால் அந்த இறுதி அறிக்கை CMP.984/2025 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, நிகழ்நிலை புகார்தாரருக்கு மேற்படி கண்டால் தெரியும் 4 நபர்களை குறைவு செய்தது குறித்து ஆட்சேபனை இருந்தால் 21.08.2025 அன்று காலை 10.30 மணிக்கு நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவிக்கும்படி அறிவிப்பு அனுப்பப்பட்டது.

3) ஆனால் நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் இன்று (08.06.2024) வரை ஆட்சேபனை அறிக்கை எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

4) அரசு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5) இவ்வழக்கில் நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் ஆட்சேபனை தாக்கல் செய்ய போதுமான வாய்ப்பும், கால அவகாசமும் வழங்கப்பட்டும், ஆட்சேபனை தாக்கல் செய்ய முன் வராத காரணத்தால் தக்கலை காவல் நிலையம் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையை கோப்பிற்கு எடுத்து எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்படுகிறது.

இறுதியில் இம்மனு முடித்து வைத்து உத்தரவிடப்படுகிறது.

ஒம்/-திருமதி. V. பார்கவி, B.A., B.L., LLM.,
நீதித்துறை நடுவர் எண்.1,
பத்மநாபபுரம்.